# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 146 /பேரூ/2025**
**நாள் : 13.02.2026**

V. சரவணக்குமார்,
சின்னவடவள்ளி,
கோயம்புத்தூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
அன்னூர் சிறப்புநிலை பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம். - எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், பொகலூர் வழி, சின்னவடவள்ளி அஞ்சல், 6/46, பெரிய வடவள்ளி என்ற முகவரியை சேர்ந்த திரு. V. சரவணக்குமார் என்பவரது 27.03.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.03.2025 அன்று பெறப்பட்டு, 146/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், பொகலூர் வழி, சின்னவடவள்ளி அஞ்சல், 6/46, பெரிய வடவள்ளி என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் திரு. V. சரவணக்குமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 27.03.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்ப்பு முகாமில் சமர்ப்பித்த மனுவில் (மனு எண். 288 நாள் 11.11.2024) அன்னூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 14ல் 8/9(1)-ல் A. சிராஜின்னிஷா என்பவர் கட்டிட அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாக பக்க திறவிடங்கள் விடப்படாமலும், பார்கிங் பகுதி விடாமலும் விதிமீறி கட்டிடம் கட்டியுள்ளார். இதை தெரிந்தே தன் சுய லாபம் அடைய பேரூராட்சியின் செயல் அலுவலர் குறைந்தளவே சொத்து வரி விதித்து பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளார் எனவும் தெரிவித்து புகார் மனு அளித்திருந்தேன். வருவாய் இழப்பு ஏற்பட்டு கொண்டிருக்கிறது என்று தெரிந்தும் உதவி இயக்குநர் அவர்கள் மூன்று மாதங்களுக்கு மேலாகியும் இதுநாள்வரை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. ஆகவே தாங்கள் உரிய விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தாங்கள் எடுத்த

நடவடிக்கையின் விபரத்தை எனக்கு தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 13.05.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் அன்னூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. அன்னூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 15.07.2025 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 328/2025/அ2ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

“திருமதி. A. சிராஜின்னிசா என்பவரின் கட்டிடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி கட்டிடத்திற்கு பல வருடங்களுக்கு முன்பு வரிவிதிப்பு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. வரைபட அனுமதி எதுவும் அன்னூர் பேரூராட்சியால் அளிக்கப்படவில்லை. மேற்படி கட்டிடத்தில் அந்த குடும்பத்தினர் மட்டுமே வசித்து வருகின்றனர். மேலும், அந்த கட்டிடத்தை சுற்றியுள்ள பல கட்டிடங்களும் எவ்வித இடைவெளியும் இல்லாமல்தான் கட்டப்பட்டுள்ளது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.” என்று தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு. V. சரவணக்குமார், எதிர்மனுதாரரான அன்னூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் புகாருக்குள்ளான இரண்டாவது எதிர்மனுதாரரான திருமதி. A. சிராஜின்னிசா ஆகியோரை 23.12.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.12.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. V. சரவணக்குமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 23.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை .

6. புகாருக்குள்ளானவரும் இரண்டாம் எதிர்மனுதாரரான திருமதி. A. சிராஜின்னிசா, என்பவரும் 23.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை .

7. எதிர்மனுதாரரான அன்னூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 23.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- “மனுதாரர் புகாராக தெரிவிக்கும் அன்னூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 8, கதவு எண். 8/9 (1), கூத்தாண்டவர் கோவில் வீதியில் திருமதி. A. சிராஜின்னிசா என்பவர் கட்டியுள்ள 202 சதுர அடி பரப்பளவில் அமையப்பெற்ற கட்டிடத்திற்கு வரைபட அனுமதி பேரூராட்சியால் வழங்கப்படவில்லை.
- மேற்காணும் கட்டிடத்தை பேரூராட்சியின் செயல் அலுவலராகிய என்னால் 13.07.2025 அன்று நேரில் ஆய்வு செய்யப்பட்டது. அப்போது திருமதி. A. சிராஜின்னிசா என்பவர் தனது மூதாதையருக்கு சொந்தமான சொத்தில் தனக்குரிய பாகத்தில் மேற்படி கட்டிடத்தை கட்ட பேரூராட்சியின் அனுமதி பெறப்பட வேண்டும் என்று தெரியாத காரணத்தினால், அறியாமையின் காரணமாக அனுமதியின்றி மேற்காணும் கட்டடத்தை கட்டியுள்ளேன் என்று தெரிவித்தார்.
- மேற்படி கட்டிடத்திற்கு நடைமுறையில் உள்ள உரிய விதிகளின்படி சொத்து வரி நிர்ணயம் செய்து நாளதுவரையில் வசூலிக்கப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023ன்படி மேற்படி அனுமதியற்ற கட்டடத்திற்கு அபராதம் விதித்து வரன்முறைப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

8. இதனைத் தொடர்ந்து அன்னூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 22.01.2026 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 328/2025/அ2-ல் கீழ்க்காணும் கூடுதல் விவரங்களை தெரிவித்துள்ளார்.

திருமதி. A. சிராஜின்னிசா என்பவர் தனது 15.07.2025 நாளிட்ட கடிதத்தில் புகாராக தெரிவிக்கும் சொத்தானது தனக்கு பூர்விகமாக பாத்தியப்பட்டது எனவும், அனுமதி பெற்ற பின்பு கட்டிடம் கட்ட வேண்டுமென்ற விபரம் தெரியாத காரணத்தினால், பல வருடங்களுக்கு முன்பே கட்டிடம் கட்டியதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 அத்தியாயம் 8 பிரிவு 134-ன்படி, அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டிடத்திற்கு அபராதம் விதித்து, வசூலிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் திருமதி. A. சிராஜின்னிசா என்பவருடைய வீட்டிற்கு அபராதம் வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

9. மனுதாரரின் புகார் மனு மற்றும் அன்னூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கைகள் மற்றும் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.

கோயம்புத்தூர் மாவட்டம், சின்னவடவள்ளி இடத்தை சார்ந்த மனுதாரர் திரு. V. சரவணக்குமார் என்பவர் தனது 27.03.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் கோயம்புத்தூர், அன்னூர் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 14, கதவு எண். 8/9(1), கூத்தாண்டவர் கோவில் வீதியில் A. சிராஜின்னிசா என்பவர் வரைபட அனுமதிக்கு மாறாக கூடுதலாகவும், போதிய இடைவெளியின்றியும், வாகன நிறுத்துமிடம் இல்லாமலும் விதிமீறி வணிகக் கட்டடம் கட்டியுள்ளதாகவும், மேற்படி கட்டடத்திற்கு பேரூராட்சி செயல் அலுவலரால் குறைந்த சொத்துவரி நிர்ணயம் செய்ததில், பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் புகார் தெரிவித்துள்ளார்.

மேற்காணும் புகார் குறித்து திருமதி A. சிராஜின்னிசா என்பவர் தனது மூதாதையருக்கு சொந்தமான சொத்தில் தனக்குரிய பாகத்தில் மேற்படி கட்டடம் கட்டும்போது பேரூராட்சியின் அனுமதி பெறப்படவேண்டும் என தெரியாமல், அறியாமையின் காரணமாக கட்டியுள்ளதாக தெரிவித்திருந்தார் எனவும் மற்றும் மேற்படி வீட்டிற்கு சொத்துவரி நாளது தேதிவரை நிர்ணயம் செய்யப்பட்ட தொகையில் தவறாது வசூலிக்கப்பட்டு வருவதாக எதிர்மனுதாரரான அன்னூர் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

இருப்பினும், 1998ஆம் ஆண்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம்,பிரிவு 134-ன்படி அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டடத்திற்கு அபராதம் விதித்து வரன்முறைப்படுத்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் மேற்படி திருமதி. A. சிராஜின்னிசா என்பவரின் வீட்டிற்கு அபராதம் வசூலிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் கூடுதல் விளக்க அறிக்கையில் தெரிவித்திருப்பது அறிய முடிகிறது.

மேற்காணும் நிலையில் எதிர்மனுதாரரான அன்னூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி பேரூராட்சியின் அனுமதியின்றி திருமதி. A. சிராஜின்னிசா என்பவரால் கட்டிய கட்டடத்திற்கு உரிய விதிகள் மற்றும் அனுமதியற்ற கட்டிடங்கள் தொடர்பான மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற ஆணைகளின்படி தொடர் நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ளுமாறு அன்னூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1. திரு. V. சரவணக்குமார்,
6/46, பெரியவடவள்ளி , சின்னவடவள்ளி அஞ்சல்,
பொகலூர் வழி 641 697,
கோயம்புத்தூர் மாவட்டம்.
2. திருமதி. A. சிராஜின்னிசா,
8/9(1), கூத்தாண்டவர் கோவில் வீதி,
அன்னூர் - 641 653,
கோயம்புத்தூர் மாவட்டம்.
3. செயல் அலுவலர்,
அன்னூர் சிறப்புநிலை பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்.
4. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
5. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

17/2/26
செயலாளர்
17/2/26